Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

11.12.2020 வெள்ளிக்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## 51 பகுதிகள் தனிமைக்குள்

கொழும்பு, டிசெ. 11

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் 7 மாவட்டங்களிலுள்ள 51 பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. கொழும்பு மாவட் 02

### கொரோனா பாதித்தால்

## அரச ஊழியர்களுக்கு இழப்பீட்டுத் திட்டம்

கொழும்பு, டிசெ. 11

அரச அலுவலர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டால் நாளொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா வீதம் இழப்பீடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அரச பணியாளர்களின் செலவீனங்களை ஈடுசெய்யும் வகையில் அக்ரஹார காப்புறுதி திட்டத்தின் ஊடாக இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. 02

# சுயாதீனமான குழுக்களில் பெரமுனவின் விசுவாசிகள்!

### கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, டிசெ. 11

சுயாதீன ஆணைக்குழுக்கள் யாவும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. உயர்பதவிகளுக்கு பெரமுனவின் ஆதரவாளர்களே நியமிக்கப்பட் டுள்ளனர். இதனால் ஜனநாயகமும், மக்களின் உரிமைகளும் கேள்விக்குறியாகியுள்ளன. இனி கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். 02

## கோத்தாபய மீது மக்களுக்கு நம்பிக்கையே இல்லை!

### பெரும்பான்மையும் நீடிக்காது என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 11

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீதான நம்பிக்கையை நாட்டு மக்கள் இழந்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'இலங்கையில் 1946ஆம் ஆண்டு உதயமான ஐக்கிய 02

## ஹிட்லரின் வழியிலே கோத்தாபய பயணம்!

கொழும்பு, டிசெ. 11

ஹிட்லரின் வழியிலேயே ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் பயணிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் 02



### 20 நாள் குழந்தையின் ஜனாஸா எரிக்கப்பட்ட விவகாரம்

## கொலைசெய்து பழக்கப்பட்டோருக்கு இதுவொன்றும் பெரிய விடயமில்லை

### வவுனியாவில் மௌலவி போராட்டம்

வவுனியா, டிசெ. 11

பிறந்து 20 நாள்களேயான பச்சிளம் குழந்தையின் ஜனாசாவை எரித்துள்ளீர்கள். கொலைசெய்து பழக்கப்பட்டவர்களுக்கு இதுவொன்றும் பெரிய 02

### இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு

## 9 கிலோ கிராம் தங்கம் கடத்தல்

### ஐந்து பேர் கைது

கொழும்பு, டிசெ. 11

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு 9 கிலோகிராம் தங்கம் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. அவற்றைக் கடத்தினார்கள் என என்ற குற்றச்சாட்டில் ஐந்துபேர் இந்தியக் கடலோர காவல் படையி 02

## 2021 ஜனவரி மாதம் முன்பள்ளிகள் ஆரம்பம்

கொழும்பு,டிசெ. 11

எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முன்பள்ளிகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சர் பியல் 02

## வடக்கு, கிழக்கையும் இலக்கு வைக்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி

### ஜனவரி முதல் வேலைத்திட்டம் ஆரம்பம்



கொழும்பு, டிசெ. 11

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சக்தியை மேலும் பலப்படுத்தும் வேலைத்திட்டம் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க இன்று 02



## பளையில் விபத்து: ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, டிசெ. 11

பளை புதுக்காட்டுப் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புதுக்காடு பகுதியில் டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிள் 02

## மாகாணசபைத் தேர்தலிலும் 'கெத்து' காட்டுவார் கோத்தா

கொழும்பு, டிசெ. 11

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சமீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மாகாணசபைத் தேர்தலின்போதும் உறுதிப்படுத்தப்படும் என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீது நாட்டு மக்களுக்கு தற்போது நம்பிக்கையில்லை 02

# சுயாதீனமான....

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'நல்லாட்சியின்போது சுயாதீன ஆணைக்கு ழுக்களின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது. அரச ஊழியர்கள்கூட அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கக்கூடிய சுதந்திரம் இருந்தது. இதனால் நாட்டுக்கு பல நன்மை கள் ஏற்பட்டன. ஆனால் இன்று சுயாதீன ஆணைக்குழுக்கள் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. தேர்தல் காலத்தில் பொதுஜன பெரமுனவின் பாதுகாப்புப் பிரிவுக்கு தலைமை வகித்து, பெரமுனவின் அலுவலகத்தில் இருந்து தேர்தலை வழிநடத் திய நபரே தேசிய பொலிஸ் ஆணைக்குழு வின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பஸில் ராஜபக்சவின் சித்தாந்தங்கள் நடைமு றைப்படுத்தப்படும் என பதவியேற்பு நிகழ் வில் பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் உரையாற்றியுள்ளார். பெரமுனவின் சார்பா கத் தேர்தலில் போட்டியிட்ட ஒருவரும் பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினராக இருக்கின்றார். இவ்வாறானவர்களிடம் எவ்வாறு சுயாதீனதன்மையை எதிர்ப்பார்ப்பது?
அதேபோல சுயாதீன அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கும் வியாபாரிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். விலைமனு கோரல்க ளின்போது அரச அதிகாரிகள், இவர்களுக்கு அடிபணியவேண்டிய நிலை ஏற்படும். தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளராகவும் பக்கச்சார்பாக செயற்படும் ஒருவரே நியமிக் கப்பட்டுள்ளார்.
ஒரு புறத்தில் இராணுவ நியமனங்கள். மறுபுறத்தில் சுயாதீன ஆணைக்குழுவின் உயர் பதவிகளுக்கும், ஏனைய நியமனங்களுக்கும் அரசியல் விசுவாசிகள் நியமிக்கப்பட்டுள்ள னர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதா சவும், கபீர் ஹாசீமும் மேற்படி நியமனங் களை நாடாளுமன்ற பேரவையில் எதிர்த்த னர். இவ்வாறான ஆணைக்குழுக்களின்கீழ் தான் எதிர்காலத்தில் தேர்தலை சந்திக்கவேண் டிய நிலைவரும். ஏகாதிபத்திய ஆட்சி நடைபெறுகின்றது என்பதற்கு சான்றாக, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களும் அழுத்தங்கள்மூலம் பதவி துறக்கவைக்கப்பட் டுள்ளனர். ஒரு புறத்தில் இராணுவ நியமனம், மறுபுறத்தில் அரசியல் நியமனம் என அரசின் பயணம் அமைவதால் மக்களின் ஜனநாயகம், உரிமைகள் எல்லாம் கேள்விக்குறியாகியுள்ளன. கடவுள்தான் இனி நாட்டு மக்களை காப்பாற்றவேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது.' என்றார். (ம-44)

# கோத்தாபய மீது...

தேசியக்கட்சி, 1951ஆம் ஆண்டு உருவான சுதந்திரக்கட்சி ஆகியலை இன்று நாட்டு மக்களின் மனங்களில் இருந்து நீங்கிவிட்டன. மக்கள் மாறவில்லை. ஆனால் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.
புதியதொரு அரசியல் கட்சியே தற்போது நாட்டை ஆள் கின்றது. பிரதான எதிர்க்கட்சியாக இருப்பதும் புதிய கட் சியே. ஆனால் மொட்டு அரசுக்கு தற்போது இருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் எதிர்காலத்தில் இருக்குமா என்பதனைக் கூறமுடியாது. மஹிந்தவை தோற்க டிக்கவே முடியாது என்றனர். 2015இல் என்ன நடந்தது? கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியானபோது நாட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை இன்று இல்லாமல்போயுள்ளது. ஊழல்கள் இடம்பெற ஆரம்பித் துள்ளன. புதிதாக இரண்டு அமைச்சுக்கள் உருவாக்கப்பட் டுள்ளன. அவ்வமைச்சுக்களுக்கு நிதிகூட ஒதுக்கப்பட வில்லை. எனவே, நாடு குறித்து சிந்திக்காமல் அரசியல் ரீதியிலேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பொருளாதார தரவுகளும் மறைக்கப்படுகின்றன' என்றார். (ம-44)

# வடக்கு, கிழக்கையும்...

சுடரொளியிடம் தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் அடுத்தக்கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கட்சி உறுப்பினர்களின் கருத்துகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி பண்டாரவளையில் நடைபெறவுள்ளது. இதன்போது கட்சியின் யாப்புக்கு அங்கீகாரம் வழங்கப்படும். அதன்பின்னர் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் அனைத்து பகுதிகளிலும் கட்சி நடவடிக் கையை பலப்படுத்தும் வேலைத்திட்டம் ஜனவரி முதல் ஆரம்ப மாகும். அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.' என்றார். (ம44)

# அரச ஊழியர்களுக்கு...

குறித்த தொகையானது அதிகபட்சமாக 10 நாட்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. அத்துடன், கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக அரச பணியா ளர் இறந்தால் அவரின் குடும்பத்தினருக்கு 7 லட்சம் ரூபா வழங்கவும் தீர்மா னிக்கப்பட் டுள்ளது. (ம-இ)

# ஹிட்லரின்...

குற்றஞ்சாட்டினார்.
கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:
'இலங்கையில் மனித உரிமை ஆணைக்குழு என்பது மிகமுக்கிய நிறுவனமாகும். பாதிக்கப்ப டும் மக்களுக்கு நீதி நிவாரணத்தை பெற்றுக்கொ டுக்கும் பணியை அது முன்னெடுக்கவேண்டும். பணம் செலவளித்து நீதிமன்றம்செல்ல முடியாத வர்கள் இங்குவந்துதான் தமது குறைகளைகூறி தீர்வைபெறுவர். மனித உரிமை ஆணைக்குழு வுக்கு, மனித உரிமை விவகாரம் தொடர்பில் தெரிந்தவர்களையே நியமிக்கப்படவேண்டும். ஆனால் இந்த அரசாங்கம் ஜகத் பாலசூரிய என்பவரை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்துள்ளது.
யார் இந்த ஜகத் பாலசூரிய, மஹிந்த ராஜபக்ச காலத்தில் அமைச்சராக இருந்தவர். ஆளுநர் பதவியை வகித்தவர். மொட்டு கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர். அவரின் மனைவி ஆளுநராக பதவி வகிக்கின்றார். மகன் தாரக பாலசூரிய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கின்றார்.
மொட்டு கட்சி உறுப்பினரை எவ்வாறு மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கமுடியும்? இது வெட்கம்கெட்ட செயலாகும். அரசாங்கத்துக்கு எதிராக எவ்வாறு முறைப்பாடுகளை முன்வைக்கமுடியும்? அவ் வாறு முன்வைத்தாலும் எவ்வாறு நீதி கிடைக் கும்? முழு உலகமும் சிரிக்கின்றது. இவரின் நியமனத்தை எவ்வாறு நியாயப்படுத்துவது? ஆக மனித உரிமை ஆணைக்குழு என்பது மொட்டு கட்சியின் கிளையாக மாற்றப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்- என்றார். (ம44)

# 2021 ஜனவரி...

நிசாந்த இதனைத் தெரிவித்துள்ளார்.
முன்பள்ளிகளை ஆரம்பிப்பது தொடர்பில் பல சுற்றுக் கலந்துரையா டல்கள் முன்னெடுக்கப்பட்டன. எனி னும், சுகாதார அமைச்சின் பரிந்துரை கள் கிடைக்கும் வரை இது குறித்த தீர்மானங்களை அமுல்படுத்த முடியா துள்ளது. தேசிய முன்பள்ளி கொள்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். அது தொடர்பான சட்ட மூலத்தை கல்வி அமைச்சர் கையளிப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# 9 கிலோ கிராம்....

னரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவ ருவதாவது,
இந்தியாவில் தூத்துக்குடி வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அவர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற் கிடமாக நின்றுகொண்டிருந்த படகில் இருந்த மண்டபம் மரைக்காயர்பட்டி ணம் பகுதியை சேர்ந்த நபரை சோதனை செய்த போது அவரது உடம்பில் மறைத்து வைக்கப்பட்டி ருந்த 9 கிலோ கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் அவருடன் இருந்த நால்வர் என மொத்தம் ஐந்து பேரைக் கைது செய்த இந்திய கட லோர காவல் படையினர், கடத்த லுக்கு பயன்படுத்திய படகு ஒன்றை யும் கைப்பற்றினர். (ம-இ)

# பளையில் விபத்து:...

என்பன மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. மோட் டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்தவராவார். காயமடைந்த நபர் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் மருத்துவமனையில் சேர்க்கப்பட முன்னரே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக் கப்படுகின்றது.
இயக்கச்சி பகுதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலை யத்தில் கடமையாற்றும் 56 வயதுடைய கிருஸ்ணன் நவநீதன் என்பவரே உயிரிழந்தவர் ஆவார். டிப்பர் வாகனத் தின் சாரதி பளை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள் ளார். கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இத்தாவில் பகுதியில் இடம்பெற்ற விபத்திலிலும் வயோதிபர் ஒருவர் உயிழந் தமை குறிப்பிடத்தக்கது. விபத்து தொடர்பான விசாரணை களை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம6,113)

# கொலைசெய்து....

விடயமல்ல - என்று தெரிவித்து வவுனியாவில் மௌலவி யொருவர் அரசுக்கு எதிராக இன்று போராட்டம் நடத்தியுள் ளார்.
வவுனியா பெரிய பள்ளிவாசலுக்கு முன்பாக இன்று காலை 10.30 மணியளவில் அவர் தனது போராட்டத்தை முன்னெடுத்தார். கோரோனா ஒரு கொடிய உயிர் கொல்லி நோயல்ல. பன்றி இறைச்சியில் உள்ள வைரசைவிட கொரோ னாவில் கொடிய வைரஸ்கள் கிடையாது. காய்ச்சலும், தலையிடியும், சளியும் எப்படி ஒரு மனிதனைக் கொல்லும். கோரோனாவுக்கு தீர்வு உடல்களை எரிப்பதா?. ஏன் இந்த அநியாயத்தை முஸ்லீம்களுக்கு செய்கிறீர்கள்?.
முள்ளிவாய்க்காலில் உரிமை கேட்டவர்களை மெனிக்பாமில் அடைத்தீர்கள். இது நியாயமா?. தமிழனும் முஸ்லீமும் கதைத்தால் தீவிரவாதி. ஆட்சி வெறி, அதிகார வெறி, அரசியல் துஷ்பிரயோகம் ஆகியவையே உங்களை இப்படிச் செய்விக்கின்றது. 20 நாள்களான குழந்தையின் ஜனாசாவை எரித்தீர்கள். நீங்கள் கொலைசெய்து பழக்கப்பட்டவர்கள். முள்ளிவாய்காலில் பச்சிளம் குழந்தைகளைக் கொன்றீர்கள். உங்களிடம் இரக்கம் இருக்குமா?. தமிழர்களின் போராட்டத் தைக் கொச்சைப்படுத்தினீர்கள். மூன்று இனங்களையும் அழித்த கருணா உங்களுக்கு நண்பன். ஆனால் உரிமைக்காக போரா டிய பிரபாகரன் பயங்கரவாதி என்றீர்கள் என்றார். (ம110,18)

# மாகாணசபைத்...

என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேவால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீது நாட்டு மக்கள் முழுமையாக நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கையில் எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை. நல்லாட்சியின்போது மாகாணசபைகள் குழி தோண்டி புதைக்கப்பட்டன. அந்த மாகாணசபைகளை மீள இயக்கும் தேர்தல் நடை பெறும்போது ஜனாதிபதிமீது நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மீண்டும் வெளிப் படும். மக்கள் நீதிமன்றம் ஊடாக சிறப்பான முடிவு வழங்கப்படும்' என்றார். (ம44)

# 51...

டத்தில் 18 பிரதேசங்களும், கம்பஹா மாவட்டத்தில் 11 பிரதேசங்களும், களுத்துறை மாவட்டத்தில் 7 பிரதேசங்களுமான மேல் மாகாணத்தில் 35 பிரதேசங்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், கண்டி மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், புத்தளம் மாவட்டத்தில் 5 பிரதேசங்களும், அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிரதே சமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

# விளையாட்டு துறையூடாக பொருளாதார அபிவிருத்தி

## பசில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.11



விளையாட்டு துறையை மேம்படுத்தி அதனூடாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள அரசு எதிர்பார்த்துள்ளது என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அதிகாரிகளுடன் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வரவு செலவுத் திட்ட வரலாற்றில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறைக்கென 8 ஆயிரத்து 264 மில்லியன் ரூபா அதிக தொகை ஒதுக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தில் லங்கா பிரிமீயர் லீக் போட்டியை நடத்துகின்றமை பொருளாதாரத்துக்கு பெரும் பலமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# உரிமைகளுக்காக கைகோருங்கள்

## நாட்டு மக்களிடம் இலங்கை திருச்சபை வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.11

வேறுபாடுகளைக் களைந்து மனித உரிமைகளுக்காக கைகோர்க்குமாறு இலங்கையர்கள் அனைவரிடமும் இலங்கை திருச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது. கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ள குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் உடல் நலம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு திருச்சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)







# முல்லைக் கரையில் இந்தியக் கழிவுகள்!

முல்லைத்தீவு, டிசெ. 11

முல்லைத்தீவு கடற்கரையில் அதிகளவான கழிவுப்பொருள்கள் கரை ஒதுங்கியுள்ளன.

அண்மைய நாள்களாக முல்லைத்தீவு கடற்கரையில் அதிகளவான கழிவுப் பொருள்கள் கரையொதுங்கியுள்ளன. இவ்வாறு கரையொதுங்கியுள்ள கழிவுப் பொருள்கள் இந்தியாவின் தமிழ்நாட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. உணவுப் பொருள்களின் கழிவுகளே அதிகமாக வீசப்பட்டுள்ளன. இவை திட்டமிட்டு கடலில் கொட்டப்பட்டிருக்கலாம் என்ற அச்சமும் வெளியிடப்பட்டுள்ளது. (ம-246)

# கொரோனா அச்சத்தால் மருத்துவமனைக்கு பூட்டு

கொழும்பு, டிசெ.11

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக கராபிட்டிய போதனா மருத்துவமனையின் 24 ஆவது விடுதி மூடப்பட்டுள்ளது என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது. அந்த விடுதியில், கொரோனாத் தொற்றுக்கு உள்ளான பலர் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தேசிய செயலணி குறிப்பிட்டுள்ளது. (வ-இ)

# ஹிஸ்புல்லா மனு விசாரணை : தலைமை நீதிபதி விலகல்

கொழும்பு, டிசெ.11

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தாக்கல் செய்த மனு மீதான விசாரணையிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர விலகியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் நீதிபதி சோபித ராஜகருணா ஆகியோர் முன்னிலையில் இந்த மனு இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, தனிப்பட்ட காரணத்தால் மனு மீதான பரிசீலனையிலிருந்து தாம் விலகுகிறேன் என தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மன்றில் அறிவித்துள்ளார். அதற்கமைய, இந்த மனு மீதான பரிசீலனை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடிப்படைவாதத்துக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைதுசெய்யப்பட்டு சி.ஐ.டி பொறுப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நஇ)

# தவிசாளராகின்றார் மஹிந்த தேசப்பிரிய



கொழும்பு, டிசெ.11

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் புதிய தவிசாளராக மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக 37 ஆண்டுகள் இருந்த மஹிந்த தேசப்பிரியவின் பதவிக்காலம் கடந்த நவம்பர் 13 ஆம் திகதி முடிவுக்கு வந்த நிலையில் தற்போது எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு, கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதியன்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 பி மற்றும் 951 பிரிவுகளின் கீழ் அமைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# அடையாளம் காணப்பட்டன மஹர கைதிகளின் சடலங்கள்

கொழும்பு,டிசெ.11

மஹர சிறைச்சாலையில் உயிரிழந்த 11 கைதிகளினதும் சடலங்கள், அவர்களது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், சடலங்கள் மீதான பிரேத பரிசோதனையை நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் முன்னெடுக்கப்படவுள்ளன.

உயிரிழந்த கைதிகளில் மினுவங்கொடவைச் சேர்ந்த இருவர், பியகம பகுதியைச் சேர்ந்த இருவர் உள்ளடங்குகின்றனர்.

ஏனைய ஏழு பேரும் ஜாஎல, என்டேரமுல்ல, வெலிவேரிய, அங்குருவாத்தோட்ட, வத்தளை உனுபிட்டிய, களனி மற்றும் சப்புகஸ்கந்த பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

உயிரிழந்துள்ள அனைத்து கைதிகளும் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் எனத் தெரிவித்துள்ள பிரதி பொலிஸ்மா சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)





# எய்ட்ஸ் தொற்றாளர்கள் வடக்கில் திடீர் அதிகரிப்பு

## புதிதாக 125 பேர் அடையாளம்

மன்னார், டிசெ.11

வடக்கு மாகாணத்தில் தற்போது வரை 125 புதிய எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மட்டும் 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட தொற்று நோய் பிரிவு பதில் மருத்துவ நிபுணர் சலினி நாணயகார தெரிவித்தார்.

சர்வதேச எயிட்ஸ் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விசேட விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

15 வயது தொடக்கம் 24 வயதுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகள் அதிகமாக எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை தரவுகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் 2019 ஆம் ஆண்டு வரை 439 புதிய எச்.ஐ.வி. தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கை முழுவதிலும் 34 பாலியல் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. எச்.ஐ.வி தொற்றுக்கான தாக்கம் இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த நிலையங்களுக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ள முடியும். என்றார். (ஐ-56)



## விண்கல் பொழிவு : இலங்கையரும் பார்வையிடலாம்

கொழும்பு, டிசெ.11

ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவை எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கையர்கள் காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழக இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், "எதிர்வரும் 13 14ஆம் திகதிகளில் வருடாந்த விண்கல் பொழிவு நிகழ்கிறது. அதிகாலை வரை நிலவு ஒளி இல்லாததால் இந்த ஆண்டு அதிக விண்கற்களைக் காணலாம். நகர ஒளி மாசுபாடு இல்லாமல் வானம் தெளிவாகவும், இருட்டாகவும் இருந்தால், ஒரு மணி நேரத்துக்கு 120 விண்கற்கள் அல்லது நிமிடத்துக்கு ஒன்று அல்லது இரண்டு விண்கற்கள் காணப்படலாம்.

இரவு 9 மணிக்குப் பிறகு கிழக்கு நோக்கிய விண்கற்களை இலங்கையர்கள் காணலாம். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மற்றும் திங்கள் சூரிய உதயத்துக்கு முன் விண்கல் பொழிவை காணமுடியும். திங்கள் அதிகாலை 2 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை சூரிய உதயத்துக்கு முந்தைய இருண்ட நேரங்கள் இதைப் பார்ப்பதற்கான சிறந்த நேரம் இருக்கும்.

இந்த விண்கல் மழை வெள்ளை, மஞ்சள், பச்சை, நீலம் மற்றும் சிவப்பு போன்ற பல வண்ணங்களில் காணப்படும் விளக்குகளின் தடத்துடன் பல வண்ணக் காட்சிக்கு பிரபலமானது.

இந்த நட்சத்திரங்கள் ஜெமினி என்ற நட்சத்திர விண்மீன் திசையிலிருந்து வருகின்றன எனத் தெரிகிறது, எனவே இதற்கு ஜெமினிட் என்று பெயரிடப்பட்டுள்ளது" எனக் குறிப் பிட்டுள்ளார்.

## சுகாதார வழிகாட்டலைப் பின்பற்ற அனைவரது ஒத்துழைப்பும் தேவை

### பிரதமர் மகிந்த வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.11



சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதற்கு அனைத்து இன மக்களதும் ஒத்துழைப்பு அவசியம். அதற்கான ஒத்துழைப்பை பெற்றுத்தருமாறு முஸ்லிம் அமைச்சர்களிடம் பிரதமர் மகிந்த ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஆரோக்கியத்தை பாதிக்கின்ற காரணிகளை இனம் மற்றும் மத அடிப்படையில் தீர்மானிக்க முடியாது.

கொவிட்-19 வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு சுகாதார நிபுணர்களின் பரிந்துரைக்கமைய நிலத்தடி நீர் மட்டம் மிகவும் ஆழமாகக் காணப்படும் வறண்ட நிலப்பரப்பை தெரிவு செய்யுமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார். (வ-இ)

## 197 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, டிசெ.11

வெளிநாடுகளிலிருந்து 197 இலங்கையர்கள் இன்று காலை நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் டுபாயில் இருந்து 107 பேரும், அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இருந்து 78 பேரும், ஜப்பானின் நரீட்டா நகரில் இருந்து 12 பேரும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். (வ-இ)





## பாரதியார் நினைவுதினம் நல்லூரில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.11

யாழ்ப்பாணம் இந்திய துணை தூதுவராலயத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த தினம் நல்லூர் ஆலய பின் வீதியில் உள்ள அவரது உருவச் சிலைக்கு முன்பாக இன்று காலை நினைவுகூரப்பட்டது.

இந்திய துணைத் தூதுவர் கே.பாலசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாரதியாரின்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலரஞ்சலியும்செலுத்தப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், யாழ் மாநகர ஆணையாளர், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந-7)





"இது உங்கள் கடற்படை" மற்றும் 'உங்கள் கடற்படையை அறிந்து கொள்ளுங்கள்' என்ற கருப்பொருளில், கடற்படையின் 70 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு காலி முகத்திடல் கடலில் கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன. இக் கப்பல்கள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என கடற்படை தெரிவித்துள்ளது. (ந)

# தேர்தல் நோக்கம் எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை

## மோசடி செய்யோம் என்கிறார் மகிந்த



கொழும்பு, டிசெ.11

தேர்தலை எதிர்பார்த்து எந்தவொரு விடயமும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. அந்த மோசடிச் செயலை மக்களுக்கு நாம் செய்ய மாட்டோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித் துள்ளார். வரவு செலவு திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான விவாதத் தின்போது, பிரதமர் இவ் வாறு குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பட்ஜெட்டை நாம் முன் வைக்கும் போது 70 பில்லியன் ரூபாவை கொரோ னாத் தொற்றுக்கென செல விட்டிருந்தோம். பட்ஜெட்டில் மூன்றாவது வாசிப்பு இடம்பெறும் இன்று (நேற்று) 82 பில்லியன் ரூபாவை கொவிட் ஒழிப்புக்காக செலவிட்டுள்ளோம். டிசம்ப ராகும்போது அது 90 பில்லி யனை விட அதிகமாகும். அதனால் இது போன்ற பாரிய சவால்களை ஏற்றுக் கொண்டு முன்வைக்கப்படும் வரவு செலவுத் திட்டமாக இதனை குறிப்பிட வேண்டும்.

உலகில் இடம்பெறும் அரசியல், பொருளாதாரம் மற்றும் சுகாதார அடிப்ப டையில் இடம்பெறும் விடயங்கள் எம்மை எந்த ளவு பாதிக்கும் என்பதைப் புரிந்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இதுவாகும்.

நாம் நமது பொருளாதா ரத்தை தேசிய மட்டத்தில் கட்டியெழுப்பியிருந்தால் இதுபோன்ற நெருக்கடி களுக்கு முகங்கொடுக்கக் கூடி யதாயிருந்திருக்கும்.

அதனாலேயே சுபீட்சத்தின் நோக்கு தேசிய பொருளாதா ரம் தொடர்பிலும், தேசிய விவசாய வளர்ச்சி தொடர்பி லும் சிந்தித்துள்ளோம் என்றார். (வ-இ)

# ஹற்றன் தமிழ் ம. வி.யில் பி.சி.ஆர் பரிசோதனை

ஹற்றன், டிசெ.11

ஹற்றன் - நோர்வூட் தமிழ் மகா வித்தியா லயத் தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை களில் 109 பேருக்கு தொற்று ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கும் 37 ஆசிரியர்களுக் கும் நேற்றைய தினம் பி.சி.ஆர் சோதனை மேற் கொள்ளப்பட்டது. இவர்களில் 109 பேரின் பரிசோதனை அறிக்கைகள் கிடைத்துள்ளன. 30 மாணவர்களுக்கான அறிக்கைகள் இதுவரை கிடைக்கவில்லை என மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் டி.சந்திரராஜன் தெரிவித்துள்ளார்.

இப் பாடசாலையில், ஆசிரியர் ஒருவருக்கு கொரோ னாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட தால், கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நோர் வூட் தமிழ் மகா வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)



# பரபரப்பிலும் ஒரு கிளுகிளுப்பு

வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட ஸ்னூக்கர் போட்டியில் (வண்ணப் பந்துகள் கொண்டு மேசை மீது ஆடும் ஆட்டம்) ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் எம்.பி வைத்திய கயஷான் நாணயக்கார மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி நளின் பண்டார ஆகிய இருவரும் வெற் றியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இணை வெற்றியாளர்களுக்கான கேடயத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச வழங்கினார். இங்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். (ந)

# மாஸ்க் அணியாத 41 பேர் கைது

கொழும்பு, டிசெ.11

முகக்கவசம் அணியாத மற்றும் சமூக இடைவெளியைப் பேணாத 41 பேர், கடந்த 24 மணித்தியாலங்க ளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதி யில் ஆயிரத்து 256 பேர் கைதுசெய் யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித் துள்ளார். (ந-இ)

# பொதுமக்கள் பாதுகாப்பு செயலராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி

கொழும்பு, டிசெ.11

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாள ராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் எதிர் வரும் நாள் களில் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

இதேவேளை, இலங்கை இராணுவத்தின் அலுவலக தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பிரபாத் தெமடன்பிட்டியவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள் ளது. அவர் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கடமை களை பொறுப்பேற்பார் என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க தெரிவித் துள்ளார்.

இராணுவ தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜகத் குணவர்தன எதிர்வரும் 14 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள நிலையிலேயே மேஜர் ஜெனரல் பிரபாத் தெமடன்பிட்டிய நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ந-இ)

# மழை பெய்யும் சாத்தியம்

கொழும்பு, டிசெ.11

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் சில இடங்களில் மழை பெய்யும் என வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வுகூறியுள் ளது. இது தொடர்பில் திணைக் களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களி லும் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள் ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப் படுகின்றார்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-இ)

# மஹர சிறைக் கைதிகள் போராட்டம் நியாயமானது

## இடைக்கால விசாரணை அறிக்கை தெரிவிக்கின்றது என்கிறார் சஜித்

கொழும்பு, டிசெ.11

மஹர சிறைச்சாலையில் கைதிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் நியாயப்படுத்தக்கூடியது எனச் சிறைச் சாலை கலவரம் குறித்து வெளியாகியுள்ள இடைக் கால விசாரணை அறிக்கை தெரிவிக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார்.

சிறைச்சாலையில் உள்வாங்கப்படக்கூடிய கைதிகளை விட மூன்று மடங்கு அதிகமானவர்கள் அங்கு காணப் பட்டனர் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தங்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துமா றும், கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள கைதி களை அங்கிருந்து வெளியேற்றுமாறும், தரமான உணவுகளை வழங்குமாறும் கைதிகள் வேண்டுகோள் விடுத்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் காணப்பட்ட நெரிசல் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஆர்ப்பாட்டம் நியாயப் படுத்தக்கூடியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மஹர சிறையில் மனித உரிமை மீறப்பட்டது என இடைக்கால விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும்" என்றார். (ந-22)

# மஹர சிறைக் கலவரத்துக்கு பாதாளக் குழுவே காரணம்

## விசாரணை அறிக்கையில் நீதியமைச்சர் விளக்கம்



கொழும்பு, டிசெ.11

மஹர சிறைச்சாலையில் கைதிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தை, பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள் சிலரே வன்முறையாக மாற்றியுள்ளனர் என மஹர சிறைச்சாலை விவகாரம் தொடர்பாக விசாரணை அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த ஐந்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இக் குழுவின் அறிக்கையை நீதியமைச்சர் நாடாளுமன்றில் தாக்கல் செய்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“சில கும்பல் தலைவர்கள் ஒருவருக்கொருவர் பழிவாங்க முயன்றதால், கைதிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் வன்முறைக்கு திரும்பியுள்ளது. கைதிகள் யாரும் துப்பாக்கிகள் ஏதும் வைத்திருக்கவில்லை. அதிகாரிகள் மற்றும் நிலைமையைத் தணிக்க வந்தவர்கள் மாத்திரமே துப்பாக்கிகளை வைத்திருந்தனர். இருப்பினும், வாயிலுக்கு அருகில் மரக் கட்டைகள், இரும்பு கம்பிகள் மற்றும் கற்கள் இருப்பதை அவதானிக்க முடிந்தது. இதேவேளை சில கைதிகள், பல வகையான மாத்திரைகளைத் திருடி அவற்றை உட்கொண்டுள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. சிறை வளாகத்தில் இருந்த முக்கிய ஆவணங்களை கைதிகள் எரித்துள்ளனர். அத்துடன் விளக்கமறியலில் கைதிகள் வைக்கப்பட்டுள்ள பகுதி தவிர, வளாகத்தில் உள்ள அனைத்து கட்டடங்களும் எரிக்கப்பட்டுள்ளன” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களை தனிமைப்படுத்தவும், ஏனையவர்களை சுய தனிமைப் படுத்தலில் வீடுகளுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனவும் குறித்த குழு பரிந்துரைத்துள்ளது. (ந-இ)

# 95 ஆயிரத்து 825 பேர் வீடுகளில் தனிமையில்

### மீறினால் 3 வருட சிறை என ஊடகப் பேச்சாளர் எச்சரிப்பு

கொழும்பு,டிசெ.11

நாடு முழுவதும் இன்று வரை 95 ஆயிரத்து 825 பேர் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். மேலும், கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவாவோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும தனிமைப்படுத்தல் விதிமுறைகள் மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும். தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் ஏதேனும் அவசர தேவைகள் இருந்தால் வீட்டுச் சுவரில் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

வீட்டு தனிமைப்படுத்தப்பட்ட விதிகளை மீறுவோர், அபராதம் மற்றும் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## தோட்ட வீடமைப்பு அமைச்சில் 50 பட்டதாரி பயிலுநர்கள்

கொழும்பு, டிசெ.11

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கு 50க்கும் மேற்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் பணிக்காக நேற்று இணைத்துக்கொள்ளப்பட்டனர். இவர்களுடனான சந்திப்பொன்று சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது பட்டதாரி பயிலுநர்களை கடமையில் இணைத் துக்கொண்டமையையிட்டு அமைச்சர் ஜீவன் தொண்டமான் மகிழ்ச்சி வெளியிட்டார். (வ-இ)

# கல்முனை மருத்துவமனையில் இரு மருத்துவர்களுக்கு தொற்று

கல்முனை, டிசெ.11

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் கடமையாற்றும் இரு மருத்துவர்களும், தாதியர் ஒருவரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுடன் தொடர்பிலிருந்த மருத்துவமனை ஊழியர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே மூவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

### ஈஸ்டர் தாக்குதல்;

## விசாரணை அதிகாரிகளுக்கு வட்டிலப்பம் வழங்கிய சாட்சி

கொழும்பு,டிசெ.11

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவுக்கு ஏப்ரல் 21 தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நேற்று சாட்சியமளிக்கச் சென்ற அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி மற்றும் அவரது குழுவினர் அதிகாரிகளுக்கு வட்டிலப்பம் எடுத்துச் சென்றமை தெரியவந்துள்ளது. சுமார் 20 பொதிகளில் இவை எடுத்து செல்லப்பட்டுள்ளதுடன் அந்த பொதிகளில் பலவற்றை ஆணைக் குழுவின் சேவையாளர்கள் சிலரும் இணைந்து ஆணைக் குழுவுக் குள் எடுத்து சென்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. நீதிமன்றத்துக்கு சமமான கௌரவத்துடன் இடம்பெறும் சாட்சி விசாரணை இடம்பெறும் இடத்துக்குள் சாட்சியாளர் ஒருவர் இவ்வாறு வட்டிலப்பம் எடுத்து சென்றமை பெரும் பரபரப்பை எற்படுத்தியுள்ளது. (வ-இ)

## அக்கரைப்பற்றில் சிசுவுக்கு தொற்று

மட்டக்களப்பு, டிசெ.11

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் 9 மாத சிசுவும் 75 வயது வயோதிபரும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, கல்முனைப் பிராந்தியத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 350ஆக உயர்ந்துள்ளது என பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார். (வ-இ)

# தொடர் மழையால் 2467 ஏக்கர் நாசம்

மட்டக்களப்பு, டிசெ.11

தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 2,467 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளது என மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி பணிப்பார் எம்.ஜெகநாதன் தெரிவித்தார். வெள்ளம் காரணமாக விவசாய திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளில் 846பேர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுணதீவு, வாகரை, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி கிரான், செங்கலடி, ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் அதிகமான நெல் வயல்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

மாவட்டத்திலுள்ள 18 பெரும்போக உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வயல் நிலங்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனால் பயிர்கள் அழுகிவருகின்றன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (வ-இ)

# அரசை எதிர்த்தமையால்தான் ஆணைக்குழு அதிரடி நீக்கம்

### கலந்துரையாடலில் ஐ.தே.க சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 11

நுரைச்சோலை மின் நிலையத்தின் எஞ்சிய கட்டுமான பணிகளை சீனாவுக்கு கொடுக்க எதிர்ப்பு தெரிவித்தமையாலேயே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை இல்லாமல் செய்ய ஆளும் கட்சி முனைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி சாடியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்து கலந்துரையாடிய போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

எவ்விதமான விலைமனு கோரலும் இல்லாது நுரைச்சோலை மின் நிலையத்தின் கட்டுமான பணிகளை சீனாவுக்கு வழங்கும் திட்டத்தை ஆணைக்குழு எதிர்த்தது. எந்தவொரு நிலைமை காணப்பட்டாலும் அரசமைப்பை மீறி அதிகாரியொருவரால் செயற்பட இயலாது. 2002 2004 ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில்தான் பொதுப் பயன்பாடு ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. நாட்டின் எதிர்கால நலன்களை கருத்திற்கொண்டே இந்த ஆணைக்குழுவை உருவாக்கினோம். தேசிய மின் துறையில் ஏற்பட கூடிய மோசடிகளைத் தவிர்த்து மக்களுக்கு பயன்தரும் வகையில் இந்த ஆணைக்குழு ஊடாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இன்று மோசடிகளை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவை அரசு இல்லாமல் செய்துள்ளது என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (வ-இ)

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber

LK Newspapers BTamil.com

10,000+ அங்கத்தவர்கள் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது




Facebook இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்